# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2015 - 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 9

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

www.tamiledc.com

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. உயிர்மெய் எழுத்துகள்

அ) 18 ஆ) 12 இ) 216 ஈ) 247

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. ஆட்டத்து மங்கையர் போல் மொய்த்து நின்ற பயிர்

அ) குரக்கன் ஆ) சோளம் இ) நெல் ஈ) எள்ளு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. வெறுவானவெளிமீது வந்து சீறுவது

அ) காற்று ஆ) மழை இ) புயல் ஈ) கதிரவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. உழவர் என்பது

அ) இடைச்சொல் ஆ) வினைச்சொல்
இ) திசைச்சொல் ஈ) பெயர்ச்சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. புத்தளம் மாவட்டத்தில் ஈமத்தாழிகள் அதிகமாகக் காணப்பட்ட இடம்

அ) பட்டிருப்பு ஆ) பொம்பரிப்பு
இ) புதுக்குடியிருப்பு ஈ) பாண்டிருப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. மகாவம்சம் எரிக்கப்பட வேண்டுமெனக் கூறிய சிங்களத் தத்துவமேதை

அ) ஈ.டபிள்யூ.அதிகாரம் ஆ) சிறிலால்கொடிகார
இ) லயனல்சரத் ஈ) குணதிலக்கா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி

அ) ஓடுஓடு ஆ) பாடுபாடு இ) கடுகடு ஈ) எடுஎடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. உச்சிமோந்து திலகமிட்டுக் குடுமிதனைக் கோதிவிட்டு உடைவாளைக் கையில் தந்தவர்

அ) வீரமகன் ஆ) வீரத்தாய்

இ) வீரமகள் ஈ) வீரத்தந்தை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. பூ + கொடி என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) பூங்கொடி ஆ) பூங்க்கொடி இ) பூகொடி ஈ) பூக்கொடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. தமிழின் காவலர் என அழைக்கப்பட்டவர்

அ) விபுலாநந்தஅடிகள் ஆ) இளங்கோவடிகள்

இ) தனிநாயகம்அடிகள் ஈ) பெக்சிஅடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. பின்வருவனவற்றுள் இடைச்சொல்

அ) போல ஆ) பகல் இ) சால ஈ) நடந்தான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. பார்த்தனன் என்ற சொல்லின் சாரியை

அ) பார் ஆ) த் இ) ன் ஈ) அன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற பாடத்தில் பாறை எனக் குறிப்பிடப்படுவது

அ) கலப்பை ஆ) கிணறு இ) நிலம் ஈ) மண்வெட்டி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. விடிவெள்ளி தோன்றுவது

அ) மேற்கில் ஆ) வடக்கில் இ) கிழக்கில் ஈ) தெற்கில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. 'தமிழியல் இதழ்' என்ற நூலை எழுதியவர்

அ) இளங்கோவடிகள் ஆ) பாரதியார்

இ) பாவேந்தர் ஈ) தனிநாயகம்அடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. கிறுகிறுத்தல் என்பதன் பொருள்

அ) தன்னைப் புகழ்தல் ஆ) தன்னை மறத்தல்

இ) தன்னை ஒறுத்தல் ஈ) தன்னை இகழ்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. பெருங்கற்கால மக்கள் செய்த பொருண்மியச் செயற்பாடுகளில் ஒன்று

அ) வணிகம் ஆ) கடற்றொழில்

இ) வேட்டையாடல் ஈ) நெசவுத்தொழில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. போனான் என்ற சொல்லின் இடைநிலை

அ) போ ஆ) ன் இ) ஆன் ஈ) அன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. முட்செடி என்பதனைப் பிரித்தெழுதினால்

அ) முட் + செடி　　　ஆ) முள் + செடி

இ) முட்ச் + செடி　　　ஈ) முள் + ச்செடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. மீன்பிடித் தொழில் செய்பவர்

அ) உழவர்　　ஆ) குயவர்　　இ) மீனவர்　　ஈ) கொல்லர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. எடுத்தான் என்ற சொல்லின் விகுதி

அ) எடு　　ஆ) த்　　இ) தான்　　ஈ) ஆன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. கவின் இனிமையாகப் பாட்டுப் பாடினான். இச்சொல்லியத்தில் அடைமொழி

அ) கவின்　　ஆ) பாட்டு　　இ) பாடினான்　　ஈ) இனிமையாக

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. கட்டுக்கதை என்று கூறப்படும் நூல்

அ) மகாவம்சம்　　　ஆ) மணிமேகலை

இ) யாழ்நூல்　　　ஈ) தமிழ்மறைவிருந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. நீலவானம் என்பது

அ) இயல்புப்புணர்ச்சி　　　ஆ) கெடுதற்புணர்ச்சி

இ) தோன்றற்புணர்ச்சி　　　ஈ) திரிதற்புணர்ச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. பளிங்கு போன்ற மனம் என்ற உவமை அணியில் வந்துள்ள உவமானம்

அ) மனம் ஆ) பளிங்கு இ) போன்ற ஈ) வெண்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. செக்கச்சிவந்த என்பது

அ) இரட்டைக்கிளவி ஆ) அடுக்குத்தொடர்

இ) அடுக்கிடுக்குத்தொடர் ஈ) இணைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. பிரித்தானியா நாட்டைச் சேர்ந்த சிறந்த நாடக ஆசிரியர்

அ) கோமர் ஆ) வெர்சில் இ) சாவோ ஈ) சேக்ச்பியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. பின்வருவனவற்றுள் உரிச்சொல்

அ) தோறும் ஆ) வாழ்ந்தான் இ) உறு ஈ) கடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. பால்கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின் .........
எனத்தொடங்கும் பாடல் இடம்பெற்ற நூல்

அ) குறுந்தொகை ஆ) மணிமேகலை

இ) நற்றிணை ஈ) புறநானூறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. ஐயந்திரிபற என்ற சொல் குறிப்பது

அ) முற்றும்கற்ற ஆ) முற்றும்தெளிவாக

இ) முற்றும்தெரியாத ஈ) முற்றும்மறந்த

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

உலகத்தில் சிறந்த கொடை வள்ளல்கள் பலர் வாழ்ந்தனர் வாழ்கின்றனர். அவர்களை நாங்கள் போற்றிப் புகழ்கின்றோம். ஆனால் எந்தவிதமான எதிர்பார்ப்புகளும் இன்றிக் கண்ணால் பருகவும் காதால் கேட்டு மகிழவும் விலை மதிப்பற்ற சிறந்த கொடைகளை இயற்கை எமக்கு அள்ளி வழங்கியுள்ளது. அவ்வியற்கைப் படைப்புகள் வெறுமனே பார்த்துச் சுவைப்பதற்காக மட்டுமல்ல எமது வாழ்க்கையை வளம்படுத்தவும் பயன்படுகின்றன. வளைந்துநெளிந்து ஓடிவரும் ஆறு பார்ப்பதற்குக் கண்ணுக்கு இனிமையையும் குளிர்ச்சியையும் தருகின்றது. அதுமட்டுமா எமது உணவுத் தேவையை நிறைவேற்ற நாம் செய்யும் பயிர்த் தொழிலுக்குத் தேவையான நீரை வாரிவழங்குகின்றது. ''திரைகடல் ஓடியும் திரவியம் தேடு'' என்பது பழமொழி. இயற்கை எமக்களித்த இம் மாபெரும் கொடைகளில் கடலும் ஒன்று. பெரும்பாலான மக்கள் கடலை நம்பியே வாழ்கின்றனர். கடல் நீரே கதிரவனால் ஆவியாகி மழையாகப் பொழிகின்றது. இயற்கையின் இக்கொடைகளை மாந்தன் மாசுபடுத்துவது மிகவும் கவலைக்குரிய ஒன்றாகும். சூழல் மாசடைவதனால்தான் அமைதியாக இருந்த கடல் ஆழிப்பேரலையாக உருவெடுத்து எம்மையே அழிக்கிறது.

1. வளைந்துநெளிந்து ஓடிவருவது எது?

______________________________

______________________________

______________________________

2. எதனால் அமைதியாக இருந்த கடல் ஆழிப்பேரலையாக உருவெடுகின்றது எனக் கூறப்படுகின்றது?

______________________________

______________________________

______________________________

3. இயற்கையின் கொடைகளை மாசுபடுத்துபவன் யார்?

______________________________

______________________________

______________________________

4. இப்பந்தியில் இடம்பெற்றுள்ள பழமொழி யாது?

______________________________

______________________________

______________________________

5. எமது வாழ்க்கையை வளம்படுத்தப் பயன்படுவன எவை?

______________________________

______________________________

______________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழில் ஐந்திற்கு விடை தருக.**

1. இடைக்கற்காலத்தை ஏன் பெருங்கற்காலம் என அழைத்தனர்?

2. தமிழாராய்ச்சி மன்றத்தைத் தோற்றுவித்த அறிஞர் யார்?

3. உலகில் முதல் மாந்தத் தோற்றம் நிகழ்ந்த இடம் எது?

4. புதியதொரு வீடு என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

5. போராட்டக்களம் சென்ற பிள்ளையின் தந்தை எவ்வாறு வீரச்சாவடைந்தார்?

6. மகாவம்சம் என்ற நூல் எழுதப்பட்டதன் நோக்கங்கள் யாவை?

7. திருவள்ளுவரின் திருக்குறளை அரங்கேற்றச் செய்தவர் யார்?

புள்ளிகள் 10

4) **பொருத்தமான சொற்களை எழுதிக் கவிதையை ஆக்குவோம்.**

## கதிரவன்

| | | | | |
|---|---|---|---|---|
| பண்பும் | பகலில் | உதிக்கும் | மறுபடியும் | பொழுது |

கதிரவனைப் பாரும் நன்றாய் - அது

கன கதைகள் கூறும்

காலைப் ______________________ தன்னிலது

கனிந்த அன்பு காட்டும்

கடும் ______________________ அதுவே - எம்மேல்

காய்ந்து சினத்தைக் கொட்டும்

மாலையான பின்னர் ______________________ - அது

மகிழ்ந்த முகம் காட்டும் - நாளும்

மாந்தன் ______________________ இதுவே - என்று

மறைமுகமாய்க் கதை கூறும்

விண்ணில் ______________________ கதிரவனே நீயும் - எங்கள்

மண்ணில் உதித்த கதிரவன் கதை கூறு

புள்ளிகள் 10

5) **இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. கீழ்வரும் சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு சொல்லியங்கள் எழுதுக.

**அலை**

பெயர் :- ______________________________

______________________________

வினை :- ______________________________

______________________________

2. பகுசொல் பகாச்சொல் ஒவ்வொன்றிற்கும் மூன்று எடுத்துக் காட்டுகள் தருக.

| ***பகுசொல்*** | ***பகாச்சொல்*** |
|---|---|
| | |
| | |
| | |

3. கீழ்வரும் வினைச்சொல்லைப் பகுத்து எழுதுக.

இருந்தனன் :- ______________________________

4. பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

அகழ்வாய்வு :- ______________________________

______________________________

நூற்றாண்டு :- ______________________________

______________________________

மானம் :- ______________________________

______________________________

5. முத்துப் போன்ற பல் என்ற உவமை அணியில் இடம் பெற்றுள்ள உவமானம், உவமேயம் பொதுத்தன்மை என்பனவற்றைத் தருக.

உவமானம் :- ______________________

உவமேயம் :- ______________________

பொதுத்தன்மை :- ______________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

ஒருநாள் சிறுவர் பலர் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தனர். விளையாடும் இடத்தில் ஒரு பெரிய கல் இருப்பதைப் பார்த்தனர். உடனே ஒரு சிறுவன் அக்கல்லை அங்கிருந்து அகற்றுவதற்கு முனைந்தான். அவனால் முடியவில்லை. இன்னொரு சிறுவனும் வந்து சேர்ந்து கல்லைத் தள்ளினான். அப்பொழுதும் கல்லை அகற்றுவதற்கு இருவராலும் முடியவில்லை. இதனைக் கண்ட மற்றைய சிறுவர்களும் வந்து ஒன்றாகச் சேர்ந்து கல்லைத் தள்ளினர். கல் எளிதாக அகற்றப்பட்டது.

______________________

______________________

______________________

______________________

______________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ இலங்கையின் முதற்குடிகள் தமிழர் என்பதனை நீர் கற்றறிந்து கொண்ட வகையில் விளக்குக.

★ தாயின் தாலாட்டு என்ற பாடலை உமது உரைநடையில் எழுதுக.

★ நீர் தமிழ்மொழி கற்பதன் நோக்கம்.

புள்ளிகள் 20